பருவத்தில் மட்டும் டெல்டா, டெல்டா அல்லாத பகுதிகளில் தமிழகத்தில் மொத்தம் 1,447 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. நெல்லுக்குக் குறைந்தபட்ச ஆதார விலையுடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ள ஊக்கத் தொகையையும் சேர்த்து, சன்ன இரக நெல்லுக்கு 1,660 ரூபாயும், சாதாரண நெல்லுக்கு 1,600 ரூபாயும் கொள்முதல் விலையாக உடனடியாக வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி அவர்கள் சொன்னதுபோல், அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நிலைமை இப்படி இருந்தால், உடனடியாக உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இந்த ஆண்டு மட்டும் 3,03,196 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். விவசாயிகள் தங்கள் நெல்லை விற்றவுடன், ECS மூலம் உடனடியாகப் பணத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 31 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இன்று வரை 32,031 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, அதற்குரிய பணத்தை உடனுக்குடன் வழங்கிட வேண்டுமென்ற அடிப்படையில் விவசாயிகளுக்கு அன்றாடம் வழங்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

116—

ஜவுளிப் பூங்கா

***6059—திருமதி ப. மனோன்மணி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீரபாண்டி தொகுதி, எளம்பிள்ளையில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், வீரபாண்டி தொகுதி, எளம்பிள்ளை கிராமத்தில் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான செயற்குறிப்புகள் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.*

திருமதி ப. மனோன்மணி: *மாண்புமிகு புரட்சித் தலைவரையும் மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன்,*

> *"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
> *இறைஎன்று வைக்கப் படும்"*

என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப ஆட்சி புரியும் எங்கள் பாசமிகு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணார் அவர்களையும் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சரின் கனிவான பார்வைக்கு எனது கோரிக்கையினை எடுத்துச்சென்று, மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ஜவுளிக்குப் புகழ் பெற்ற எளம்பிள்ளை, வேம்படிதாளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 'அபூர்வா பட்டு' எனும் செயற்கை இழைப் பட்டுச் சேலைகள், சுமார் 1,000 கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டு, நாடு முழுவதும் விற்பனையாகின்றன. வீரபாண்டி தொகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் மேற்கண்ட இரகம் 10 கோடி ரூபாய் அளவில் கொள்முதல் செய்யப்படுகின்றது. கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களும் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பைப் பெறும்வகையில், மேற்கண்ட சேலை இரகத்தினை, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அதிகளவு உற்பத்தி செய்து, அந்த ஜவுளிகளை கொள்முதல் செய்து, நாடு

முழுவதுமுள்ள 200 கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில், விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணார் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் 61 ஜவுளிப் பூங்காக்கள் இயங்கி வருகின்றன. அதில் தமிழ்நாட்டில் மட்டும் 8 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இந்த 8 ஜவுளிப் பூங்காக்களில் 736.25 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் கிட்டத்தட்ட 67,300 பேர் வேலைவாய்ப்பைப் பெற்று வருகிறார்கள். ஒரு ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு 25 ஏக்கர் நிலம் வேண்டும்; 50 தொழில் முதலீட்டாளர்கள் தொழில் செய்ய முன்வர வேண்டும். இதற்கு மத்திய அரசு 40 சதவிகிதம் மானியம் அல்லது 40 கோடி ரூபாய் உதவித் தொகையை வழங்குகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 9 சதவிகிதம் அல்லது 9 கோடி ரூபாய் நிதியுதவி செய்கிறது. மீதியிருக்கிற 51 சதவிகித முதலீட்டை அங்கே தொழில் செய்ய முன்வரும் தொழில் முதலீட்டாளர்கள் தங்களுடைய நிதியாகவோ அல்லது வங்கியில் கடனாகவோ பெற்று தொழில் தொடங்க முன்வர வேண்டும். அப்படி தொழில் தொடங்க முன்வருவார்கள் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எப்போது வேண்டுமானாலும் ஜவுளிப் பூங்கா அமைத்துக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது.*

அதுமட்டுமல்ல; இந்த அளவுக்குப் பெரிய அளவில் ஜவுளிப் பூங்கா அமைப்பது கடினம் என்று சொன்னால், சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காவையும் அமைப்பதற்கு அரசு அனுமதியளிக்கிறது. அதற்காக மட்டும் 2.5 கோடி ரூபாய் நிதியுதவி அளிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில் செயல்படும் அரசு தயாராக இருக்கிறது. ஆனால், தொழில் முதலீட்டாளர்கள் முன்வருவதில்லை. சேலம் மாவட்டத்தில், கடந்த 26–10–2017 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்

அவர்கள் தொழில் முனைவோர்கள் அனைவரையும் அழைத்து, “காலியிடம் இருக்கிறது; அரசினுடைய தொழிற்பேட்டைகளில் இடம் இருக்கிறது; அதை எடுத்துக்கொள்ளுங்கள்; கைத்தறித் துறைக்குச் சொந்தமான இடம் இருக்கிறது; தொழில் தொடங்குவதற்காக அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்” என்று தெரிவித்தார்கள். ஆனாலும் எவரும் தொழில் தொடங்க முன்வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர், ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டுமென்று தெரிவிக்கும் தொழில் முதலீட்டாளர்களை நீங்கள் அழைத்துப் பேசுங்கள். அவர்கள் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு முன்வருவார்கள் என்றால், மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் செயல்படும் அரசு எப்போது வேண்டுமானாலும் ஜவுளிப் பூங்கா அமைத்துக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.

திருமதி ப. மனோன்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர்கள் முன்வருவார்கள் என்றால் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் ஆலோசனையின்படி, ஜவுளிப் பூங்கா அமைத்துத் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

117—

மரவள்ளிக் கிழங்கு ஆலை

***32398—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—